
உளி - 8 | ஓசை - 9 | மார்ச் - 2025 | திங்களிதழ்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

www.padaippu.com

# கல்வெட்டு

## கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
ஆர்.பிரகாஷ்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| தீபிகா சுரேஷ் | 04 |
| நடராஜன் பெருமாள் | 04 |
| மகேஷ் சிபி | 04 |
| தங்கராஜ் பழநி | 05 |
| சரண்யா சத்தியநாராயணன் | 06 |
| பி. ஹேமா | 06 |
| பாபு | 06 |
| கி.சரஸ்வதி | 06 |
| ஷப்ரா இல்முத்தீன் | 07 |
| தமீம்.அசாருதீன் | 08 |
| ஷிபானா அஸீம் | 08 |
| நித்யா | 09 |
| மெஹராஜ்பேகம் | 09 |
| சிவசபாபதி பழனிசாமி | 09 |
| ஐ.தர்மசிங் | 10 |
| காசாவயல் கண்ணன் | 10 |
| கயல் | 10 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 11 |
| கவிதைச் சிறுவன் | 11 |
| தி.கலையரசி | 12 |
| ந.சிவநேசன் | 12 |
| கௌ ஆனந்தபிரபு | 13 |
| அன்பழகன் ஜி | 13 |
| சங்கரி சிவகணேசன் | 14 |
| அ.சீனிவாசன் | 15 |
| தங்கேஸ் | 16 |
| கவிஜி | 17 |
| ம.சக்திவேலாயுதம் | 17 |
| பன்னீர்செல்வம் | 18 |
| ஆ.விஜயலெட்சுமி | 19 |
| பாத்திமா சில்வியா | 20 |
| ஆ.சார்லஸ் | 20 |
| பிரபுசங்கர் க | 21 |
| கி.கவியரசன் | 22 |
| சாய் மீரா | 22 |
| செ.வீரமணி | 23 |
| சுயம்பு | 24 |
| புதுகை ஆதீரா | 24 |
| தனபாலன் தர்ஷன் | 24 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | 25 |
| மகா செல்வம் | 26 |
| க. புனிதன் | 27 |
| தேனி முத்து பிரசாத் | 28 |
| மஞ்சு | 29 |
| மணி அமரன் | 30 |
| ச. இராஜ்குமார் | 31 |
| பிருந்தா சாரதி | 31 |
| ஷீபா ராணி | 32 |
| வி.வி. கலைச்செல்வி | 32 |
| மு.முபாரக் | 33 |
| தங்க.ஜெயபால் ஜோதி | 33 |
| கோ.லீலா | 34 |
| அபூ சுகந்தன் | 35 |
| சுப்பு அழகேசன் | 36 |
| சுப்பையா கந்தையா | 36 |
| புதுகை விஜய்ஆனந்த் | 37 |
| மேகலா செந்தில் குமார் | 38 |
| ஜமீல் | 39 |
| அனீஸ் அஹமத் | 39 |



நீ விட்டுச் சென்ற
அதே இடத்தில் தான்
நான் என்னை
தேடிக்கொண்டேன்

கண்டுகொண்ட என்னை
இனி ஒரு போதும்
தொலைப்பதற்கில்லை
எதற்காகவும்
யாருக்காகவும்.

வாழ்தல் வரம்.

■ தீபிகா சுரேஷ்

வன் வெற்றிடத் தகவல்களைச்
சேகரித்தபடி மெல்ல நகர்ந்த
காற்றின் மடியில் தோதாக

தவிர்க்க முடியாத சில
காரண காரியங்கள் இணைந்து
மூர்க்கமாக முனகியபடியிருக்க

தூது வரக் காத்திருந்த
கரைந்துருகும் மனங்களோ
காதல் பிரிவுகளின் ஆராய்ச்சியில்
கண்ணும் கருத்துமாயிருக்க

சோகக்கதை சொர்க்கத்தோடு
உள் தாழிட்டுக் கொண்டன
எதற்கும் எளிதில் அஞ்சாத
முத்த சத்தமுணர்ந்த கண்கள்

■ நடராஜன் பெருமாள்

இதுவரை
பனித்துளி மழைத்துளி
பூச்சிகள்
வெல்லக்கட்டிகளையே
பிரம்மாண்டமென
தன் கவிதைகளில்
எழுதியிருந்த எறும்பு
முதன் முதலாய்
பறக்குமொரு பறவையின் காலினை
இறுகப் பற்றியிருக்கிறது

■ மகேஷ் சிபி



## வாழ்த்துகளால் வாழ்பவன்

காலையில் ஆழ்ந்த
உறக்கத்திலிருந்தவனை
மெல்லிய குரலில்
எழுப்பி விடுகிறது
ஓர் அதிகாலை வாழ்த்து.
அவனுக்குப் பல் தேய்த்து விடுகிறது
ஒரு வாழ்த்து.
முகச்சவரம்
செய்து விடுகிறது
ஒரு வாழ்த்து.
வெதுவெதுப்பாக வெந்நீர்
போட்டுக் கொடுக்கிறது
ஒரு வாழ்த்து.
சோப்பு தேய்த்து
குளிப்பாட்டி விடுகிறது
ஒரு வாழ்த்து.
உணவு ஊட்டி விடுகிறது
ஒரு வாழ்த்து.
அவனை
டூவிலரில் அமர வைத்து
அலுவலகம் அழைத்துச் செல்கிறது
ஒரு வாழ்த்து.
அவனுடைய எல்லா
வேலைகளையும்
இழுத்துப் போட்டுச்
செய்கிறது
ஒரு வாழ்த்து.
திரும்ப வீட்டிற்கு வந்தவனை
உறங்க வைத்துப்
போர்த்தி விடுகிறது
ஒரு வாழ்த்து.
வாழ்த்துகளுக்கிடையே
தொலைந்து போனவனின்
நள்ளிரவு கனவிற்குள்
நுழைந்து
கலவரப்படுத்துகின்றன
அன்றைய தினம்
வந்து குவிந்த
அத்தனை வாழ்த்துகளும்...!

■ தங்கராஜ் பழநி



இனியும் மலடியென்று
சொல்லாதீர்கள்
ஆயிரம் கவிதைகளை
பிரசவித்தவள் நான்

■ பி. ஹேமா

மேகத்திடமிருந்து
மழை விழுந்தது
ஏனோ மனிதர்களிடமிருந்து
கல் மட்டுமே விழுகிறது
அந்த குளத்தில்

■ பாபு

குருவிகள் என் வீட்டிற்குள்
கட்டியுள்ள சிறு கூட்டினை
தினமும்
பார்ப்பதும்
அது பொரித்த குஞ்சுகளின்
கீச்சிடும் சத்தங்களால்
என் இதழ்கள் பூரிப்பதும்
வழக்கமாகிவிட்டது...
நீண்ட நேரமாகியும் கீச்சொலி
என்றேனும் கேட்காமலிருந்தால்...
சிறு பதைப்புடன்
கூட்டிற்கு சற்று அருகில் சென்று
என்னவென்று பார்க்காமல்
இருக்க முடிந்ததேயில்லை...
வெகுநேரமாய் தூங்கிகொண்டேயிருக்கும்
குழந்தையின் தூளியை விலக்கி பார்ப்பது
இயல்பு தானே?

■ சரண்யா சத்தியநாராயணன்

## எதற்காக இது?

துரோகம் வலி தரலாம்
இயலாமை துன்புறுத்தலாம்
புறக்கணிப்பு துயரூட்டலாம்
பகைமை சுடலாம்
இந்த அன்பு இத்தனை
வேதனை தருவதில்
என்ன நியாயம் இருக்கிறது?

■ கி.சரஸ்வதி



மிகப்பிடித்தமான பேச்சு
எப்போதும் கிடைப்பதில்லை

மிகப் பிடித்தமான நேரம்
எப்போதும் தொடர்வதில்லை

மிகப் பிடித்தவர்களுடனான
உரையாடல்
என்றைக்கும் தொடதேர்ச்சியாய்
வாய்ப்பதில்லை

மிகப் பிடித்தமானவர்களுடனான
அருகாமை
நீண்ட நேரம் நீள்வதில்லை

மிகப்பிடித்தமான சந்தோஷம்
எப்போதும் நீடிப்பதில்லை

மிகப்பிடித்தமான இடத்தில்
மனதார என்றைக்கும்
தங்கி விட முடிவதில்லை

மிக நீண்ட காத்திருப்பு
உடனடியாக என்றைக்குமே
அரங்கேறுவதில்லை

மிகப்பிடித்தமான வாழ்க்கை
என்றைக்குமே தொடர்வதில்லை

இத்தனையும்
குறைவாகக் கிடைப்பதால் தானா
இன்னும் சுவாரஸ்யம் இழக்காமல்
இருக்கிறது இவ்வாழ்க்கை
சொல்!

■ ஷப்ரா இல்முத்தீன்



எதை குறித்தும்
நான் ஆச்சரியப்டுவதில்லை

என் ஆச்சரியங்களை
நீ விழுங்கிய பின்

நீ ஆச்சரியமாக பார்ப்பதையெல்லாம்
நான் பரிகாசிக்கிறேன் !...

என் ஆச்சரிய குறியை
கேள்விக்குறியாக்குகிறது
உன்னுள் மறைந்திருக்கும்
ஆச்சரிய சர்ப்பம் !

■ தமீம்.அசாருதீன்

இளைப்பாற பயணங்கள் போதும்
இளைப்பாற தனிமையான தருணங்கள் போதும்
இளைப்பாற சில அன்பின் சொற்கள் போதும்
இளைப்பாற சில அன்பின் கரங்கள் போதும்
இளைப்பாற சில அன்பின் முகங்கள் போதும்

இது போதாதெனின்
இளைப்பாற கதவுகளற்ற
சாளரங்களுடன் கூடிய
ஒரு மூலையேனும் போதும்
வெறுமெனே வானம் பாத்திருக்க

அதன் வழி
பேரண்டத்தின்
பேரொளியில்
ஒரு துளி நுகர்ந்து
இக் காலதீதத்தின்
இடுக்குகளில் என்னை
இருத்திக்கொண்டு நகர்கிறேன்

யாருக்கும் புலப்படாமல்
யாருக்கும் புரியாமல்...

■ ஷிபானா அஸீம்



இலக்கற்று பறந்து
திரிகிறேன் உன்னில்
நீ என் வானம்...

அலைந்த திரிந்து
சரணடைகிறேன்
உன்னில் மட்டுமே
நீ என் திசைகாட்டும்
பறவை ...

உன்னருகில் மட்டும்
ஒளிபெறுகிறேன்
நீ என் கைக்கு எட்டும்
நிலா...

எல்லைகள் தாண்ட
விருப்பமில்லை
நீ என் சுதந்திரக் கூண்டு...

■ நித்யா

மெல்ல மெல்ல
இருளை பருகிக் கொண்டிருக்கிறது
விடியல்

■ மெஹராஜ்பேகம்

கடலலையில்
தடுமாறி புரளும்
காலி மதுபுட்டி

■ சிவசபாபதி பழனிசாமி



**கா**ல்களைப் பிணைத்திருக்கும்
சங்கிலியின் பலம் அல்ல
யானையை
கட்டி வைத்திருப்பது
பாகனின்
அன்பின் ஆழம்.

■ ஐ.தர்மசிங்

**நீ**ரின்றி அமையாது உலகுயென
நித்தம் ஊற்றுகிறான் தண்ணீர்
வேரின்றி அமையாது உயிரென
பட்டுப்போகிறது
வாடகை வீட்டில்
தொட்டிச் செடி.

■ காசாவயல் கண்ணன்

## சிகரம் நோக்கி பயணம்

இப்போதெல்லாம்
என்னை மீட்கும் வாய்ப்புகள்
குறைந்து வருவதாய் உணர்கிறேன் !!

போக போக நாட்கள் இன்னும்
கடுமையானதாகவே
இருக்கப்போவதாய் உணர்கிறேன் !!

சமதளமாக இல்லையே
வாழ்க்கை பயணம்
மலையுச்சியை நோக்கி துரத்திட
பாறைகள் இடையில் பயணமும்
பிடிமானம் இல்லா நகர்வுகளுமாய் !!

பூஞ்சோலையான மகிழ் பதின்களோ
அடிவாரம் போன்ற
இளமை காலங்களோ
திரும்ப வராதா என்ற
பேராசை கூட இல்லை

சற்றே சரிவுடன்
சுவாசிக்க கிடைத்த
சில சமீபத்திய நாட்களேனும்
மீண்டும் கிடைக்காதா என்றே

செங்குத்து பாதைகளில்
சுவாசத்துக்கும் பஞ்சமாகிட
உச்சியை தொடும் முன்
இன்னும் என்னவெல்லாமோ
என்றே ஆயாசமாய் !!

■ கயல்




தொலைந்துப் போன
நதியின் பெயரை இடைவிடாது
உச்சரித்துக் கொண்டிருந்தன
கூழாங்கற்கள்

என்றோ சொல்லிப் போன
அன்பின் ஈரம் இன்னமும்
கசிந்துக் கொண்டிருந்தது
அதன் இதயத்தில்

கடலினைக் காண ஆசைக்கொண்டு
உதிர்ந்த இலையொன்று
வறண்ட மணலில் நதியை
தேடிக் கொண்டிருந்தது

இருகரைகளையும்
இணைத்து விளையாடிக் கொண்டிருந்த
குழந்தைகளின் மகிழ்ச்சியில்
தன்னை நிறைத்துக் கொண்டது நதி

மணலை வாரிச் சென்றவன்
கூழாங்கற்களை விட்டுச் சென்றான்
நதியின் இருப்பைக் காட்ட.

■ செ.ரா.கிருஷ்ணகுமாரி

அன்பை அத்தனை தீவிரமாய்
உற்று நோக்க அவசியம் இல்லை...
துளிகூட செயற்கைத்தன்மை
இல்லாப் பேரியல்பாய் வெளிப்படும்
யாவுமே அன்புதான் ...!!

■ கவிதைச் சிறுவன்



தவறு செய்பவர்களைப் பார்த்து எழும்
அதே அச்சம்
மிகச்சரியாக இருப்பவர்களிடத்திலும்
வந்து விடுகிறது

அவர்களின்
பூதக்கண்ணாடியில்
அப்பாவித்தனம்கூட
விகாரமாய் காட்சியளிக்கிறது

மிகச்சரியின் தன்மையை
ஒரே சமயத்தில்
வாளாகவும் வீசுகிறார்கள்
கேடயமாகவும் ஏந்துகிறார்கள்

என் வீட்டில்
சரி தவறு என இரண்டே அறைகள் தான்
உள்ளன
காலத்துக்குத் தகுந்தாற்போல்
அந்தக் கோட்பாட்டு அறைகளை
புதுப்பித்துக்கட்ட வேண்டியதாய் உள்ளது
மிகச்சரியின் மூன்றாம் அறைக்கு
எங்கே போவேன் ?

அதனால்தான்
வானும் நிலமும்
தன்னியல்பில் பழகும்
பிரபஞ்சத்தில்
மிகச்சரியின் வேட்டைக்கு அஞ்சுகிறேன்
ஓர் எளிய விலங்காக.

■ தி.கலையரசி

நினைவு தப்பிப் போகிற காலமென்று ஒன்று உண்டு
எதையும் நினைவூட்ட முடியாத கையறு நிலையில்
நாம் அமர்ந்திருப்போம் மொத்த நினைவும்
உருக்கொண்டு முன்னாலிருக்க
கண்ணாடியில் தெரிவது தான் தானென
அறியாதக் குழந்தை
யாரோ என பார்த்துச் சிரிப்பதைப் போல
வயதை கைகளில் ஏந்தி சிரிக்கும் சத்தம்
அறையெங்கும் எதிரொலிக்கும்
அப்படியான அறை தான்
நாம் நமக்காக கொடுத்து வைத்த வானம்.

■ ந.சிவநேசன்



இந்த இரவை
அப்பா கடந்தாக வேண்டும்.
நீண்ட ஓட்டத்தின்
களைப்பு முகத்தில் தெரிகிறது.
மீண்டெழ விருப்பமற்றதாய்
கரங்கள் துவண்டிருக்கின்றன.
மேலுங்கீழுமாய் ஏறியிறங்கும்
மார்பில் அரூபமாய் அமர்ந்திருக்கிறது
அந்திமம்.
இந்த நீள்இரவின் மறுமுனையில்
மருத்துவத்தின் காலக்கெடு
குரூரப்புன்னகையோடு நிற்கிறது.
எங்கிருந்தோ அறைக்குள்
நுழைந்திருக்கிறது
கருநிற பட்டாம்பூச்சி ஒன்று.
இனி திறக்குமா எனத்தெரியாத
அந்தக்கண்களின் ஓரத்திலிருந்து
என் நம்பிக்கை
கசிந்து கொண்டே இருக்கிறது.
ஏற்பாடுகள் தயார் என்று
குறுஞ்செய்தி வருகிற நொடியில்
செலவினங்களை கணக்கிடும் மூளையைக்
கண்டு அதிர்ச்சியுறுகிறது மனம்.
சாத்தப்பட்ட கதவிற்கு வெளியே
நிற்கும் துயரத்தின் பொருட்டு
கதவைத் திறக்கவே கூடாதென
நினைத்த நொடியில்
சாளரத்தின் வழியே வெளியேறிப்
பறந்தது அந்த பட்டாம்பூச்சி.
நான் திரும்பி அப்பாவை
பார்க்கவே இல்லை.

■ கௌ ஆனந்தபிரபு

## பிரார்த்தனை

நான் பல நாட்கள்
கடவுளை பார்த்திருக்கிறேன்.
அவன் பேசியதே இல்லை
சிரித்ததும் இல்லை
முகத்தை உம்மென
வைத்திருந்ததுமில்லை.
பரவாயில்லை
அவன்
கடவுளாகவே இருக்கட்டும்
நான் மனிதனாக
இருந்தால் போதும்.

■ அன்பழகன் ஜி



உண்மைகளும் முரண்களும்
முட்டிக்கொள்ளும் தருணத்தில்தான்
இந்த வாழ்க்கை சாவுநாற்றம்
வீசுகிறது...

மரணத்தின் கருணை
அளப்பரியதுதான்
ஆனாலும்
சராசரி தேவைகளுடனும்
நிதர்சனங்களுடனும் போலிகளற்ற
நகரும் எவருக்குமே
வாழ்ந்து கொண்டு மரணிப்பதும்
மரணித்துக் கொண்டு
வாழ்வதுமான போக்கில்
உடன்பாடிருப்பதில்லை...

இன்னும் இந்த உலகில்
தொலைந்து போகாதிருக்க
இயங்கிக் கொண்டிருக்கும்
காலத்தின் கால்களோடு
என்னைப் பூட்டிக்கொள்கிறேன்...

அவை பிறவிப்பெருங்கடல்
நோக்கி இழுக்கின்றன
ஒரு படகைப் போல்
இந்த உடல் மிதக்கின்றது...

திண்மமடைந்து கிடக்கும்
முரண்கள்
வாழ்தலின் தேவையுணர்ந்து
ஒரு சமநிலையில் மிகைப்படாமல்
எடையிழக்கின்றன...

எதுவும் கடக்கும் நெரிசல் தான்
கடந்து போகலாம்
வாருங்கள்

வாழ்க்கை ஒரு
வளர்ப்பு நாயைப் போல்
வசப்பட்டுவிடும்...

■ சங்கரி சிவகணேசன்



பந்தல் போட
ஆரம்பிக்கும் போது
எரிச்சல் காற்றில் கலக்கிறது.

ரங்கராட்டினங்கள் சுழலும் வேளை
மனம் சுழன்று, நிழலில் விழுகிறது.

திருவிழாக் கடைகளில் கூட்டம் கூடும்போது
அருவருப்பு மேகமாய் மூடுகிறது.

தேர் உலா வரும் நேரம்
தலை குனிந்து,
நாணம் வேகமாய் மறைகிறது.

வாணவெடி பொய்க்கும் தருணம்
கடும் சிரிப்பு போல் தெறிக்கிறது.

பந்தல் கழட்ட ஆரம்பிக்கும் போதுதான்
மனதில் இயல்பு நிலை திரும்புகிறது.

உண்ட ஊருக்கு
இரண்டகம் நினைக்கக் கூடாது தான்,

இந்த வருசமும்
சொந்த ஊர்த் திருவிழாவிற்குப் போகாததைக்
குத்திக் காட்டும்
இந்த ஊர்த் திருவிழாவை
வேறெப்படி கொண்டாடுவதாம்?

■ அ.சீனிவாசன்



## வருகை

என் சுவாசக் காற்றே
நீ எங்கே இருக்கிறாய் ?
இந்த மரம் கல்லாகி
எத்தனை ஆண்டுகள் கடந்து விட்டன !

இதன் கிளைகளுக்குள்
தேரை புகுந்து விட்டது
முதுமை
ஒவ்வொரு இலையாக
பட்டுப்போக வைத்துக் கொண்டிருக்கிறது


இன்னும் கொஞ்சம் உயிர்ப்போடு இருப்பது
பச்சையம் கலந்த இதன் அடிப்பகுதி தான்

சபிக்கப்பட்ட ஆண்டுகள்
முடிவடையும் நேரம்
ஒவ்வொரு கிளையும்
ஏகாந்த தவத்தில்
உன் வரவை நோக்கி

நீ எப்படி வரப்போகிறாய்
குளிர் மழையாகவா
கடும் புயலாகவா ?

வாழ்க்கை இன்னும் கொஞ்சம்
மிச்சமிருக்கிறது இந்த மரத்தில்

■ தங்கேஸ்



ரீங்காரமிடும் மென்சோகம்
இனம் புரிந்த வெறுமை
தினம் பூசும் புது தேகம்
ஆடை துறத்தல் எதுவென
கேட்காத கேள்வி சொல்லிய
பின்னும் சொல்லும் தொடர்ச்சி
பசித்த புசித்த பசித்த புசித்த
தொடர் தத்துவ மிச்சம்
சாளரக் கசிவென நுழைந்து
கொண்டே இருக்கும்
எதிர்நிலை அதுவோ
மயக்கத்தின் ஓசைக்குள்
மன ஊமைக்கும் மயக்கம்
இப்போது தோன்றுகிறது
என்னிரு திசைகளில்
நானும் நானேவும்

■ கவிஜி

நிலவாக வாழ்ந்திட
ஆசைதான் வானுக்கு...

வானாக வாழ்ந்திட
ஆசைதான் நிலவுக்கு...

பருந்திற்கு மட்டும் எப்போதுமே
பருந்தாகவே பறந்திட ஆசை...

வானையும் நிலவையும்
தொட்டுப் பறப்பதற்கு...
பார்ப்பதற்கு!

கருடன் பூப்போட்டாலும் சரி...
வானம் குடை பிடித்தாலும் சரி...
நிலவு வெளிச்சம் தந்தாலும் சரி...

உயரப் பறப்பதற்கும் உயர்ந்தே பறப்பதற்கும்
ஒரு பருந்தாக பறந்திடவே
ஆசை எனக்குள் பூக்கிறது...

இயற்கை எனை அள்ளினால் மகிழ்ச்சி...
கிள்ளினால்?
வேறென்ன கிளர்ச்சியே!

■ ம.சக்திவேலாயுதம்



## அலையலையாக ஆசைகள்...

பிசுபிசுப்புடன் இருக்கும்
இவ்விறக்கமற்ற இரவுகளில்
சுற்றிலும் மிதக்கும் நினைவுகளை
மெல்ல வருடிக் கொடுத்த படி
அந்த இரவுகளை கடந்து செல்கிறேன்...

விடியற் காலையில்
என்னையும் மீறி
உள் நுழையும் கனவுகளை
என்னால் எந்தவிதமான தணிக்கைக்கும்
ஆட்படுத்த முடியவில்லை...

தூக்கம் என்பது
வெளித் தொடர்பு இல்லாத ஒரு மயக்க நிலை...
மயக்கம் நிலையில் வரும் நினைவுகளின்
கனவுகள் மீண்டும் அதே பரிமாணத்துடன்
மறுநாள் நினைவு கூறுவதில்லை...

ஒரே கனவு மீண்டும் மீண்டும்
தூக்கத்தின் போது வருகிறது
ஆழ்மனதில் அமர்ந்து கொண்டு
உயர்நிலை அசதியில்
என் தூக்கத்தில் நடமாடுகிறது...
அப்போது நான் அசைவற்றிருக்கிறேன்...

கைவசப்படாத ஆசைகள்
தீராத நினைவுகளாக உள்ளுக்குள்
படிந்து விடுகிறது...

தேவைப்படுகின்ற ஆசைகள்
தேவைப்படாத ஆசைகள் என்று எதையும்
பிரித்து பிரித்து மனசுக்குள்
அடுக்கி வைப்பதில்லை...
அடக்கி வைப்பதும் இல்லை...

என் அனுமதி இன்றி
உள் நுழைந்து என் அனுமதிக்காக
என்னை வற்புறுத்தும் ஆசைகளை
மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கிறேன்...
ஆசைகள் கொஞ்சம் கொஞ்சமாக
உண்ணுகிறது என்னை...

■ பன்னீர்செல்வம்



தவியாய் தவித்து
பூமி பிளந்து
ஏங்கிய பாலையின்
தாகத்துக்கு
கிடைத்த உள்ளங்கை மழையைப்போல்
மவுனங்களால்
நிறைக்கப்பட்ட என்
உயிர்க்கோளின் வளி
நிரப்பப்பட்டது
உன் அதீதத்தின்
ஆக்கிரமிப்பால்...

ஆடை கலைத்து
ஆடி மலைக்கிறது
உன் பிறப்பைச் சுமக்கும்
என் சுவாசப்பூக்கள்!

இழை இழையாய்
வழிந்தோடும்
வியப்பின் ஆழத்தில்
வழி நெடுக முளைக்கிறது
சந்தோச சாரல்கள்!

ஒற்றை முத்தாய்
உதித்த உன் காதலை
முத்தத்தின் மத்தால்
கடைந்து அமிர்தமாய்ப்
பருகியதில் ஆனந்தக் கூத்தாடுகிறது
ஆணவத்தில் என்
காதல்!

■ ஆ.விஜயலெட்சுமி



எதிர்பார்த்திருந்த
நேரமதில் தான்
வருகை தந்திருக்கிறாய்...
எழுதித் தீர்க்க ஏதுமில்லாத
தருணமதில் தான்
தரிசித்திருக்கிறாய்...
ஓரமாய் ஒதுங்கி நின்று
பார்க்கும் நிலை தான்
இப்போது எனக்கு...
நம் பார்வைகள்
துருவங்களில் இருந்தபோதும்
உன் உருவங்களில்
கிறங்கிப்போகிறவள் நான்...
இன்றும் அதே கிறக்கத்தில்...

நீ மழை...!!!

■ பாத்திமா சில்வியா

## ஒத்திசைவு

காற்று
என்ன சொன்னாலும்,
மறுப்பேதுமின்றி
கேட்டுக்கொள்கிறது,
புத்திசாலியான
பாய்மரப் படகு.

ஒத்திசைவின் ஒலி
எதிரொலிக்கிறது,
கடலெங்கும்.

■ ஆ.சார்லஸ்



## மாற்றங்கள்

கல்லூரி படிக்கையில்
ஒரே அறையில்
ஒரே போர்வைக்குள்
சேர்ந்து உறங்கிய நண்பன்
இப்போது பிரிவினைவாதம் பேசுகிறான்
இந்த தேசத்தின் ஆதி மதம்
நாங்கள்தான்
வந்தேறிகள் வெளியேறுங்கள்
என்னும் வாசகத்தை
எந்த குற்றவுணர்வுமின்றி
எங்கள் குழுவில் பகிர்கிறான்
நான் வீட்டிற்கு செல்லும் போதெல்லாம்
கண்டிப்பாக பிரியாணி
எடுத்து வர வேண்டுமென
அடம் பிடித்தவன்

என் வெள்ளிக்கிழமை தொழுகைக்காக
கல்லூரி விரிவுரையாளரிடம்
அனுமதி கேட்டவன்
என் உடல் தளர்ந்திருந்த போது
இரவெல்லாம் விழித்திருந்தவன்
அவனும் இவனும்
ஒருவன் தானா??

■ பிரபுசங்கர் க



உதிர்ந்து விழும்
இலைகளைப் பார்த்துக் கொண்டு
அசைவுகளற்று இருக்கிறார்
மரத்தடியில் ஒரு முதியவர்
ஒருவேளை அவரது மரம்
உள்ளே துளிர்த்துக் கொண்டு இருக்கலாம்
அல்லது கடைசி இலை
எப்பொழுது விழும்
என்று எதிர்நோக்கி இருக்கலாம்
எதற்கும்
அவர் அசையும் வரை
நான் காத்திருக்கிறேன்...

■ கி.கவியரசன்

அன்பின் அடைக்கலச்சிறகு
ஒன்றை உதிர்த்து விட்டபின்
ஆரோகித்துப் பறந்தது
பறத்தலை மறந்த
பறவையொன்று

வீணையொன்றன்
நரம்புகளை அறுத்த பின்
அதன் நிம்மதிக்கொப்பாக

நெடுங்கனவொன்றை
துண்டுகளாக்கி
பொற்கிண்ணப்பாலில்
அமிழ்த்தி உண்டு களித்தது
நிலா
அவ்விடத்துள் தான்
நீள ஆழ அமிழ்தலை
பழகியிருக்கக்கூடும்
அவ்வீணை
நரம்பறுத்து உண்பதை

கனவு தீர்ந்த நிலா
வெறிச்சென்றிருந்த
வானில் பறத்தலை மறந்த பறவையை
புணர்ந்து இப்போது ஒரு இசைக்குறிப்பை
ஈன்றெடுக்க வேணும்
வீணையை அழையுங்கள்

■ சாய் மீரா



உன்னைப்போலவே ஒருத்தி
அண்ணா சாலையில்
விளம்பரப்பலகை ஒன்றில்
நியான்கள் ஒளிர புன்னகையை
விற்றுக்கொண்டிருந்தாள்

சோர்ந்து சலித்த பின் மதிய
இரயில் பயணத்தை
சட்டென மலர்த்தி
முன்னிருக்கையில் வந்தமர்ந்தவளுக்கு
அச்சு அசலாக உன்னுடைய சாயல்

அதே பெட்டியில் குழலேந்திய
யாசகன் ஒருவன்
இசைத்துக்கொண்டிருந்தது
உன்னுடைய குரல்தான்

இரவுப்பயணங்களில்
ஜன்னல் நிலவாய் தூர பயணங்களில்
ராஜாவின் பாடல்களாய்
உடன் வந்ததும் நீயே தான்

பேருந்து பயணமொன்றில்
கனிந்து ததும்பிக்கொண்டிருந்த
மதுரை அரசாளும்
மீனாட்சியும்
மாநகர் காஞ்சியிலே
காமாட்சியும்
நீயன்றி வேறில்லை

நேற்று
ஒரு சின்னஞ்சிறு மணிப்புறாவின்
கண்களிலும்
இன்று
பருவம் தப்பி பொழிந்து கொண்டிருக்கும்
மழைத்தாரைகளிலும் காண்பதெல்லாம்
உன்னுடைய பிம்பங்களைத்தான்

நீ என்
வழித்துணை
உன் நினைவுகள்
வாழ்க்கை துணை

■ செ.வீரமணி



நீங்கள் விளக்கேற்றி விட்டு
தூக்கியெறிந்த தீக்குச்சிதான் நான்,
இனி உங்களுக்கு எந்த வகையிலும்
உபயோகபடமாட்டேனென்றுதான்
உலக விளிம்பின் ஓர் கரையோரமாய்
உங்களை விட்டு ஒதுங்கி
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
என்றாவது ஓர் கூட்டிற்கு
பொருத்தமான குச்சியாய்
எனை தூக்கிசெல்லும்
பறவையின் வருகைக்காக...

■ சுயம்பு

கோடை மழை
காய்ந்த பூந்தொட்டியில் நிறைகிறது
குருவியின் தாகம்

■ புதுகை ஆதீரா

கஞ்சி இல்லாமலேயே
ஒட்டிக் கிடக்கிறது
ஏழையின் வயிறு ...!

■ தனபாலன் தர்ஷன்

## இப்போதெல்லாம்

உன் வார்த்தைகள்
உன் செயல்கள் எனக்கு
அச்சத்தைத் தருகின்றன

உன் மௌனங்களை பிரதியெடுத்து
ஒத்திக்கொள்கையில்
அவை சமாதானப்பிரியங்களைப்
பேசுவது போல் இல்லை

உன் வழித்தடங்கள்
மாறிவிட்டதாய் எண்ணாது
உனக்கும் புதிய நண்பர்கள்
கிடைத்து விட்டதாய் மகிழ்வுறுகிறேன்

உன் அவர்களின்
விசாரணைப்பகுதியில்
என் கண்களின் சிறுபொட்டுத் தூசியையும்
சிதறிவிடாது சிந்திவிடாது இருக்கிறேன்.

எப்போதும் போல்
வழமைகளை பிடிக்காது
சலிப்புறும் தினங்கள்
என்னைப்போல் அவர்களும்
உனக்கு வேண்டாதொரு
எண்ணம் வருகையில் திரும்பிப் பார்

அங்கேயே
நின்று கொண்டிருக்கும்
நான் காத்திருப்பது
உன் பேரன்பெனும்
என் நினைவிற்காக அல்ல,
இன்னும் நல்ல
யோசனைகளை உனக்குத் தருவதற்காக

புறக்கணிப்பும்
நிராகரிப்பும் சுடாத நிழலில்
நான் என் நாட்களை எப்படி கடந்துவந்தேன்
என்பதை சொல்வதற்காக...



■ உமா மஹேஸ்வரி பால்ராஜ்



வேய்ங்குழல் வேணுகானமென
மெய்மறந்து யென்னிசையை
பலரும் சிலாகித்து
கொண்டாடிக் கொண்டிருக்க!

நானோ ?
காட்டு மூங்கில் யென்னில்
ஆழ்துளையிட்டு
உட்புகுந்து ரீங்காரமிட்டு...
யென் அதிர்வை
இன்னிசையாக்கிச் சென்ற
பொன்வண்டொன்றை
தேடிக் கொண்டிருக்கின்றேன்!

அதன் வழவழப்பான இறகுகளில்
ஒட்டிக் கொண்டிருக்கின்றது
யென்னுயிர் நாதம்!

யென் குரல்வளை குழிக்குள்
ஆழமாக பதிந்து விட்டது
அதன் மெல்லிய கால் பாதம்!

யதனை தேடி
நான்
தொண்டை வலிக்க
கத்தி கூக்குரலிட்டு
அழுது ஆர்பாட்டம் செய்து
காணாத துக்கத்தில்
பிலாக்கணம்
பாடிக் கொண்டிருக்க?

நீங்களே
சுற்றி நின்று ரசித்து ஆராவாரத்துடன்
மகிழ்ச்சி ஓலமிட்டு
இதுவல்லவோ !
“சுந்தர கானம்” யென பிதற்றுகிறீர்கள்.

■ மகா செல்வம்

## பூனைக் குட்டிக்கு பைத்தியம் பிடிப்பதில்லை

உதிர்ந்த சருகையும்
மலரையும்
ஒன்றாக பார்க்கிறது
பூனைக்குட்டி

இரை பிடிக்க
பந்து போல் ஊர்ந்து போகிறது
சில நேரம் ராணுவ வீரன் போல்
தவழ்ந்து போகிறது

பசிக்கு அல்லாமல்
தவளையை மட்டும்
விளையாட்டுக்காய்
வைத்திருக்கிறது பூனை

கூழாங்கல் கண்களால்
தலை சாய்த்து பார்க்கும் பொழுது
வாழ்வின் சலனம்
நின்று போகிறது

சந்தையில் வாங்கி வந்த
தரை விரிப்பை முதன் முதலில்
கொண்டாட துவங்குகிறது
பூனை

தரை விரிப்பு
பந்து
நூற்கண்டு
ரப்பர் வளையம்
தவளை
எதாவது ஒன்றுடன்
பிரபஞ்சத்தை கொண்டாட
துவங்கும் பூனைக் குட்டிக்கு
பைத்தியம் பிடிப்பதில்லை

■ க. புனிதன்





புத்தனாக இருக்காதீர்கள்
யசோதை வருத்தப்படுவார்

புத்தனாக இருக்காதீர்கள்
ராகுலன் அப்பாவை தேடிக்கொண்டிருப்பான்

புத்தனாக இருக்காதீர்கள்
சாக்கிய வம்சம் அரசரைத்
தேடிக்கொண்டிருக்கும்

புத்தனாக இருக்காதீர்கள்
அரண்மனை வசதிகள்
யாருமில்லாமல் காத்திருக்கும்

புத்தனாக இருங்கள்
வாழ்வின் ரகசியத்தை தேடி
துறவறம் செய்து கொண்டிருப்பீர்கள்

புத்தனாக இருங்கள்
ஆசையே துன்பத்திற்கு காரணம் என்பதை
கண்டுபிடிப்பீர்கள்

புத்தானாக இருங்கள்
போதிமரம் உங்களுக்காக
காத்துக்கொண்டிருக்கும்

புத்தனாக இருங்கள்
உயர்ந்த ஞானத்தை
அடைவீர்கள்...

புத்தனாகவும் இருங்கள்
புத்தன் இல்லாமலும் இருங்கள்...

■ தேனி முத்து பிரசாத்

## என்னைப் போலொரு ஆண்



அடித்துப் பேசுமவன் முக பாவனைகளை
அகல விழித்துப் பார்த்திருக்கிறேன்
அறிமுகமானவைகளாகவே
தோன்றுகின்றன!

தான் ரசிக்கின்ற ஒவ்வொன்றையும்
என்னோடு ஒப்பிட்டுக்
கொஞ்சிக் கொள்கின்றான்
பூக்கள், பூனைக்குட்டி
நாய்க்குட்டி, கரடி பொம்மைகள் என
எதையும் விட்டு வைப்பதில்லை!

உணர்ச்சிப் பெருக்கான
தருணங்களில் உள்ளங்கை வியர்த்து
உருகி நிற்கிறான்
எனினும் வெளிக்காட்டாமல்
வியப்பு தருகின்றான்!

சுடு சொல் கேட்டு விட்டால்
சுருங்கிப் போகிறான்!
நிதர்சனத்தை நியாயத்தை
நிரூபிக்கும் வரை
நிம்மதியிழக்கிறான் பின்
நிராகரித்துக் கடந்து நகர்கின்றான்!

சில மணி நேரப் பிரிவுகளின்
அடுத்த அத்தியாயத்தில்
அ முதல் ஃ வரை  அச்சுப் பிசகாமல் என்முன்
அடுக்கி வைத்த பின்னர் தான்
அடுத்த வேலை பார்க்கின்றான்!

ஒவ்வொரு நாளின் முதல் நிமிடத்தையும்
முத்தாய்ப்பு நிமிடத்தையும் எனக்கான
முத்தத்தினாலேயே முறையாக்குகிறான்!

வாக்கு தவறுபவர்களை வஞ்சிக்காமல் மாறாக
வருத்தம் வடிக்கிறான் வழிகாட்டி
மாற்றம் வகுத்தளிக்கிறான்!

கருத்துகளில் மட்டுமின்றிக்
காந்தமாகிய கண்களிலும்
நீண்டவிரல்களிலும் கூட
என்னைப் பிரதிபலிக்கின்றான்

என் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டி
எண்ணத்தில் எழும்  கேள்வியுமாகின்றான்

இயற்கையின் படைப்பில்
என்னைப் போலொரு
‘ஆண்’ இவனோ ?

■ மஞ்சு



பழைய காதலியை
பழிவாங்கும் எண்ணத்தை
மனம் மாற்றியிருக்கிறதா

வலியில் அவதியுறும்
தாயின் கால் முட்டுவலிக்கு
தைலம் தேய்த்துவிட செய்திருக்கிறதா

படுக்கையில் விழுந்த தந்தைக்கு
சிறுநீர் கழிக்க பாத்திரத்தை
கையிலேந்த செய்திருக்கிறதா

உதிரக்காலங்களில் சோர்வுற்று கிடக்கும்
மனைவியின் கறை படிந்த ஆடைகளை
துவைக்க செய்திருக்கிறதா

நண்பர்களின் முதுகில் குத்த
மறைத்து வைத்திருந்த துரோக கத்திகளை
துருப்பிடிக்க செய்திருக்கிறதா

யாசிக்கும் கரங்கள் கண்டால்
முகம் சுளித்து விலகாமல்
காசோடு புன்னகையிட செய்திருக்கிதா

படிப்பதை பாதியில் நிறுத்திவிட்டு
துளி கண்ணீரையாவது
கன்னம் வழிய செய்திருக்கிறதா

இல்லையென்றால்
நீங்கள் இன்னும் வாசிக்கவே இல்லை
ஒரு நல்ல கவிதையை...

■ மணி அமரன்



நேசிப்பதையும் நிராகரிப்பதையும்
ஒருசேர இரண்டையும்
கற்றுக்கொடுத்ததே
நீங்கள் தானே

நீங்கள் செய்த
அதே விடயத்தைத் தான்
நானும் செய்கிறேன்
அதை எப்படி நீங்கள்
சரியென்றும் தவறென்றும்
சொல்கீறீர்கள் ...

எது சரி எது தவறென்பதையும்
நீங்கள் மீண்டும்
முதலிலிருந்து கற்றுக்கொடுங்கள்

சரியான சரியையும்
தவறான சரியையும் கற்றுக்கொள்கிறேன்.
தவறான சரியையும் சரியான சரியையும்
பிறகு சரிசெய்துகொள்கிறேன்

இப்போது நீங்கள் நேசிப்பதையும்
நிராகரிப்பதையும் சரியாக செய்யுங்கள் ...

■ ச. இராஜ்குமார்

வானம் பொய்த்து விட்டதாம்
பொய் சொல்கிறார்கள்
மரம் வெட்டிகள்.

■ பிருந்தா சாரதி

கருப்பு என்பதால்
விலக்கி வைக்காதே ...
உன்னை ஒருபோதும்
விலகாமல் தொடரும்
நிழலடா நான் !!

■ ஷீபா ராணி



## கடினம் எல்லாம் அசைக்கும் வரைதான்

இந்தமுறையும்
அந்த பெரிய வீட்டின்
கதவுகள் பூட்டியேயிருந்தது.
அதே பூட்டு தான் பத்து வருடங்களாக
தொங்கிக் கொண்டிருக்கிறது.

போனமுறை பூட்டியிருந்ததிற்கு
காரணம் கேட்டேன்
எல்லோரும் வெளியூரில்
குடியேறிவிட்டார்கள் என்றார்கள்
இந்தமுறை இந்த வீடு
விற்பனை ஆகிவிட்டது என்றார்கள்.

அப்போதும் இப்போதும்
அதே பூட்டுதான்

நான் பக்கத்தில் போய் ஒரு முறை
பூட்டை அசைத்துப் பார்த்தேன்
பொலபொல என்று உதிர்ந்தன
இத்தனை நாளாய் எல்லோரும்
பூட்டிய வீட்டைப் பார்த்து கேட்டிருந்த
அத்தனை கேள்விகளும்

நாளை பூட்டு மிக லேசாகிவிடும்

■ வி.வி. கலைச்செல்வி



என்னைப் போலவே
அவளும் கவிதை எழுதுகிறாள்...
நான் கவிதை எழுதி
கவிஞனாக வாழ்கிறேன்,
அவள் கவிதை எழுதி
கவிதையாகவே வாழ்கிறாள்!

■ மு.முபாரக்

உள்ளழைக்கும் மணி
ஒலிக்கும்வரை
வெளியே விட்ட காலணி மாதிரி
கதவருகில் காத்துக் கிடக்கிறது
மரணம்
அது உள்ளே நுழைகிறபோது
நீங்கள் வீட்டை விட்டு
வெளியேற வேண்டும்
இப்படித்தான் எழுதப்பட்டிருக்கிறது
வசனம் ஏதுமில்லாத
உங்கள் நாடகத்தின் கடைசிக் காட்சி

■ தங்க.ஜெயபால் ஜோதி



நிதர்சன பேரன்பை ஆன்ம தீண்டலை
எழுதிவிட முடிவதில்லை சொற்களுக்குள்
கட்டுண்டு விடாத சொற்கள் கடந்த
சொல்லற்ற பெருவெளியின்
பெரும் ருசியது...

உணர்ந்தவர் உளறுவதில்லை
ஆழ்மௌனம் அலைகடலின்
ஆழ்நீல பேரழகு...

தனிமையிலும் இதழுக்குள்
பொங்கும் புன்னகைகளுக்கு
அலைகளின் ஆர்ப்பரிப்பு...

என்ன என்பதிலும் ம் என்பதிலுமாக
உட்புகும் பேரன்பை செல்லப் பெயரிட்டு
அழைப்பதென்பது தேவராகம்...

யாருமறியாத யாராலும் அழைக்கப்படாத
செல்லப்பெயரில் அழைக்கும் குரலில்
ஆர்ப்பரித்து தளும்பி வழிந்தோடுகிறது
பேரன்பின் வற்றாத பெருநதியொன்று...

பொதுவெளியில் அழைக்கப்படும் பெயருக்கு
தன்னிச்சையாய் திரும்புவது போல்

உரிய குரல் விளிக்கும் செல்லப்பெயர்களில்
செல்லப்பிராணியென குழைந்து குழைந்து
பின்னோடி விடுகிறது மனம்...

குழந்தையாய் கையிலேந்திய
தந்தை அழைத்த செல்லப்பெயரிலேயே
ப்ரியமான பேரன்பொன்று அழைக்கும் போது...
குழைந்து மட்டுமல்ல
குழந்தையாகியும் விடுகிறது மனம்...

அம்முவை அம்முவென யாரழைத்தாலும்
“அம்மு” என நானழைப்பது போல்
அழைக்க முடியுமா?

யாராலும் அழைத்துவிட முடியாத பேரன்பை
குழைத்து அழைக்கும் செல்லப்பெயர்களுக்கு
தனி நறுமணம்... சுவாசம் நின்ற பின்னும்
வெளியெங்கும் பரவி வீசும் ரகசிய நறுமணமது...

இப்போதும் சொல்கிறேன்... நிதர்சன பேரன்பை
ஆன்ம தீண்டலை எழுதிவிட முடிவதில்லை.

செல்லப்பெயர்களிட்டு விளிக்கும் குரலே
மீண்டும் உயிர்ப்பிக்கின்றன...

செல்லப்பெயரிட்டு அழைக்கும் குரலுக்கு
தாய்மையின் குணம் உயிரின் நறுமணம்.

உணர்ந்தவரன்றி யாருமறியா
தேவமலர் செல்லப்பெயர்...

இன்று என் தோட்டத்தில்
நித்திய தேவமலரொன்று
மலர்ந்திருக்கிறது...

அங்கும்...

■ கோ.லீலா



நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்,
பேசுதல் என்பது
இருவர் சம்பந்தப்பட்டது என்றா?

இத்தனை நாளாய்
நாள் முழுவதும்
என்னுடன் பேசிவிட்டு
இன்று சிறு சண்டைக்காக
‘என்னிடம் பேசாதே’
என்று சொல்லிவிட்டாய்.

நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்,
பேசுதல் என்பது
இருவர் சம்பந்தப்பட்டது என்றா?

கணினி
செயற்கை நுண்ணறிவில்
உயிரற்ற மனிதர்களை
உருவாக்குவது போல
என் இதயக் கணினியில்
என் உயிரின் அறிவினால்
உன்னை உயிரோட்டமாய்
வடித்து வைத்திருக்கிறேன்.

நான் உன்னுடன் பேசுவதற்கும்
நீ என்னை ஏசுவதற்கும்
நீ என்ற உன் உடல் அவசியமில்லை.
எனக்கும் கடவுளுக்குமான
உரையாடலைப் போலத்தான்
உனக்கும் எனக்குமான பேச்சு.

நீ என்னை காண வரும்போதெல்லாம்
உயிர்மேல் உடல் வந்து ஒன்றியதேயன்றி
நீ வந்ததாகவும் சென்றதாகவும்
ஒரு மாற்றைத்தையும் நான் உணர்ந்ததில்லை.

நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்,
பேசுதல் என்பது
இருவர் சம்பந்தப்பட்டது என்றா?

ஒருதலைக் காதலர்களிடமோ
காதலர்களை இழந்த காதலர்களிடமோ
கேட்டுப்பார் தெரியும் ;
பேசுதல் என்பது
இருவர் ஒருவராகும் சித்தன் நிலைக்கும்
ஒருவர் இருவராய் மாறும் பித்தன் நிலைக்கும்
இடையேயான
ஒரு எச்சனின் செயல்.

நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்,
பேசுதல் என்பது
இருவர் சம்பந்தப்பட்டது என்றா?

■ அபூ சுகந்தன்



## காதல்

அது...
ஒன்றுமில்லை...
விடைகளுக்கு
மிகச் சரியான
வினாக்களை எழுதும்
தேர்வு...

■ சுப்பு அழகேசன்

## மதி

மிதவைத்தன்மையால்
சிறகடிக்காமலேயே பறக்கின்ற
சில அணில்
இனங்களைப் போலவும்
சில மீன் இனங்களைப்போலவும்
கல்வியறிவேயில்லாதவர்களாலும்
கையொப்பமிட முடியும்
அவர்களுக்கு
அவரவர் கை கட்டைவிரல்
பேனாவாகிப் போகிறது

■ சுப்பையா கந்தையா



## மின்வெட்டும் 90களின் மாலையும்:

மின்மினி பூச்சிகளும்
எங்களோடு
கண்ணாமூச்சி
ஆடத் தொடங்கும்

பாட்டியின் பாக்குரலில் இருந்து
பிறந்திடும் கதைகளின் ஓசை

முட்டை கிளாஸ் விளக்கொளியில்
அக்காவின் விரலசைவில்
கொம்பு முளைத்த மானும்
நாயும் விளையாடும்

பக்கத்து வீட்டு நாசிகளையும்
துளைத்து எடுக்கும்
அம்மா பிசைந்து தரும்
கருவாட்டுக் குழம்புக் கவளம்

கொசுக்களின் பக்கவாத்தியத்துடன்
மின்சாரம் வந்தது
தெரியாமலேயே தூங்கிப் போவோம்

ஆயினும் அப்பாவின் வருகைக்காய் காத்திருக்கும்
அம்மாவின்
கண்களில் மட்டும் தொடர்ந்திடும் மின்வெட்டு

■ புதுகை விஜய்ஆனந்த்



என் மனக்குமுறல்கள் கேட்டும்
ஊமையாய் தானிருக்கிறாய்,,.

கண்டாலும் காணாமல் போவதில்
குருடாகத்தானிருக்கிறாய்,,,

ஊமையாய்; குருடான பிறகு
சொல்வதையெங்கு கேட்கப்போகிறாய்
செவிடாகத்தானிருக்கப்போகிறாய்,,,

உன் விரல் பிடித்து விளையாடிய
பிரியங்களில்;
சிக்கித் தொலையும் என்னையும்;
என் நேசங்களையும்;
கடந்து போகத்துணிந்த உனக்கு-

இன்னும் தெரியவில்லை
எனக்கும் உனக்குமான நேசங்களால்தான்
உயிர்ப்போடிருக்கிறது
நம் பிரியங்கள் என,,,,?

நானும் அழுதுதீர்த்துக்கொள்கிறேன்
ஆர்ப்பரித்து கிடக்கும்
ஆழ்மனதை அமைதிப்படுத்த
வழி தெரியாமல்...!

■ மேகலா செந்தில் குமார்



சுமப்பதற்கென்றே
வளர்கப்படுகின்றனர்
அனேகமான அக்காக்கள்

குழந்தையாக இருந்தபோது
தனது ஆம்மாக்களின்
குழந்தைகளை சுமந்தார்கள்

பின்னர் தனது மகவுகளை
குழந்தைப் பராயம்
தீர்ந்து போகும் வரை சுமந்தார்கள்

பின்னரிலும் பின்னர்
தனது குழந்தைகளின்
குளந்தைகளை சுமந்தார்கள்
இப்போதும் சுமக்கிறார்கள்
குழந்தைகளாய் மாறிப்போன
தனது பெற்றறோர்களை

இத்தனைக்கும் தங்களை சுமப்பதற்கு
அம்மாக்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கவே இல்லை
அக்காக்கள்

■ ஜமீல்

இரவின் உறக்கத்தின் பாரங்களையும்
கனவுகளையும் உன் நினைவுகளை
நெஞ்சில் சுமந்து பாயில் படுத்து உதறி
உற்சாகமடைவேன்.....
இப்போதெல்லாம் பாரங்கள் கூடிப்போயின
சுமக்க முடியாமல் தத்தளிக்கிறேன்
என் மெத்தையில்
ஒவ்வொரு நாளும் சுருட்டி
சுமந்து சோர்வடைகிறேன் ....

■ அனீஸ் அஹமத்

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்” என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களைத் திரட்டிக்கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கியப் படைப்புக் குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது.



புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


இலக்கிய படைப்பு குழுமம்

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,

கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788